[1981] ஏப்ரல் 24

ஓமலூர் வட்டார அரிசன நலத்துறை அலுவலகம்.

*வினா எண் 871.—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டார அரிசன நலத்துறை அலுவலகம் சேலத்தில் செயல்பட்டு வருவதன் காரணம் யாது?

(ஆ) எப்போது அந்த அலுவலகம் ஓமலூருக்கு மாற்றப் படும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஓமலூரில் தக்கதொரு கட்டிட இடவசதி கிடைக்காத காரணத்தால் ஓமலூர் ஆதி திராவிடர் நல அலுவலகம் ஓமலூருக்கு மாற்றப்படாமல் சேலத்தில் இயங்கி வந்தது.

(ஆ) ஓமலூர் ஆதி திராவிடர் நல அலுவலகம், ஓமலூருக்கு மாற்றப்பட்டு 16—1—1981-ந் தேதியிலிருந்து ஓமலூர் தாலுக்கா அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பஸ் தொழிலாளர்களுக்கும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட மோதலிலே, விருத்தாசலத்திலே துப்பாக்கிச்சூடு நடைபெற்று, அங்கே 144.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி நிறைய உறுப்பினர்கள் காலை 8 மணிக்கே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், ஐயா அவர்கள், இப்பொழுதுதான் வந்திருக்கிறார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் ஸ்டிரைக் பற்றிஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் ஏற்கனவே பேசியாகிவிட்டது என்று மறுத்து விட்டார்கள்.